**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**<u>CC.NO.134/2023</u>**
**Dated :02.06.2026**
**Deposition of witness for : P.W.6**

**List of Witness LW12 Examined as PW6 (IO)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஞானவேல் | வயது | : | 56 |
| தந்தை பெயர் | : | தர்மராஜ் | தாலுகா | : | **திருச்சி** |
| கிராமம் | : | திருச்சி | தொழில் | : | காவல் ஆய்வாளர் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது திருச்சி மாவட்டம் CBCID SIT இல் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 24.03.2021 ஆம் தேதி கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது கந்தர்வக்கோட்டை காவல் நிலைய குற்ற எண்.171/2021 சட்டப்பிரிவு 304-A இதச -ன் படி வழக்கினை கந்தர்வக்கோட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் சுந்தரமூர்த்தி என்பவர் பதிவு செய்து, மேல் விசாரணைக்காக வழக்கின் கோப்பினை என்னிடம் ஒப்படைத்தார். **(மேற்படி கணினி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2) நான், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மாலை 06.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் குமார் மற்றும் முனியமுத்து ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்

**சாட்சியின் கையொப்பம்** **மா.உ/நீ.ந**

செய்து சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். (மேற்படி **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**3)** பின்னர் 25.03.2021 ஆம் தேதி புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று, அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த மணிமாறன் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் காலை 08.30 மணி முதல் 10.00 மணி வரை பிரேத விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன். **(பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் இறந்தவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக முதல்நிலைக்காவலர் பிரபு என்பவர் மூலமாக மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் அளித்து, பிரேத பரிசோதனைக்கு பிறகு பிரேதத்தை அவரது உறவினர்களிடம் ஒப்படைக்க அறிவுறுத்தினேன். பின்னர் சாட்சிகள் சின்னராஜா, சிவானந்தம், ரெங்கராஜ், வீரமணி, மகாலிங்கம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4) மேற்படி சாட்சிகளை விசாரித்ததில் வழக்கின் சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால், எதிரியை தேடி வந்த நிலையில், 26.03.2021 ஆம் தேதி காலை 11.45 மணியளவில் தாமாக நிலையம் ஆஜரான எதிரி செல்லப்பா என்பவரை காரணம் கூறி கைது செய்து, உரிய நடைமுறைக்கு பின் நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் எதிரி ஆஜர் செய்த வழக்கு விபத்தை ஏற்படுத்திய TN-28-BB-1161 என்ற பதிவெண் கொண்ட டிப்பர் லாரியை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 15.04.2021 ஆம் தேதி விபத்திற்குள்ளான TN-55-BE-1402 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன்.

5) பின்னர் 23.04.2021 ஆம் தேதி புதுக்கோட்டை வட்டார போக்குவரத்து அலுவலகம் சென்று விபத்து ஏற்படுத்திய டிப்பர் லாரி மற்றும் விபத்திற்கு உள்ளனா இருசக்கர வாகனத்தை

ஆய்வு செய்த, மோட்டார் வாகன ஆய்வாளர் கருப்புசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று, மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் பெற்று வந்தேன். ( **மேற்படி மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் முறையே அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**6)** பின்னர் அன்றைய தினமே பிரேத பரிசோதனை அலுவல் செய்த முதல் நிலை காவலர் பிரபு மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் சுந்தரமூர்த்தி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனக்கு பணிமாறுதல் வந்துவிட்டதால் வழக்கு கோப்பினை எனக்கு பின் பொறுப்பு ஏற்ற காவல் ஆய்வாளர் செந்தில்மாறன் என்பவரிடம் ஒப்படைத்தேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ள உதவி ஆய்வாளர் சுந்தரமூர்த்தி என்பவரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம் என்பதாலும் நான் இவ்வழக்கில் பெரும்பாலான புலன் விசாரணை செய்துள்ளதாலும் அவருக்காகவும் சாட்சியம் அளித்துள்ளேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

உதவி ஆய்வாளர் சுந்தர மூர்த்தியுடன் நான் ஒன்றாக பணியாற்றவில்லை என்றால் சரியல்ல. நான் கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்தில் பணியாற்றினேன். முதல் தகவல் அறிக்கை குறித்து வழக்கின் கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் நான் இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி என்ற அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளேன். புகார் மனுவிலும் ,முதல் தகவல் அறிக்கையிலும் எதிரியின் பெயர் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் **1** முதல் **7** வரையிலான சாட்சிகள் சேவியர் குடிக்காடு கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகள் இறந்துபோன நபரின் இரத்த உறவு முறையை சார்ந்தவர்கள் என்றால் சரியல்ல. ஊர்க்காரர்கள் ஆவார்கள். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் சாலை தஞ்சாவூர்–கறம்பக்குடி நெடுஞ்சாலை அகலமான சாலை என்றால் சரியல்ல. மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள

ராஜமாணிக்கம் என்பவரை சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை என்றால் சம்பவத்தின் போது அவர் அங்கு இல்லை என்பதால் அவரை விசாரிக்கவில்லை. மேற்படி ராஜமாணிக்கத்தின் வீட்டை தவிர சம்பவ நடந்ததாக சொல்லப்படும் சாலைக்கு அருகில் வீடுகள், கடைகள் ஏதும் இல்லை என்றால் தங்கராஜ் என்பவரின் மாடி வீடு உள்ளது. எதிரி காவல் நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக குறிப்புகள் உள்ளது என்றால் காவல் நிலையம் முன்பு வைத்து கைது செய்யப்பட்டார். இவ்வழக்கில் ஊர்க்காரர்கள் மற்றும் இரத்த உறவை சார்ந்த நபர்களை தவிர வேறு தனிநபர் சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் ஊர்க்காரர்கள் ஆவார். நான் முறையாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.06.02 17:30:18 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**